**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **42**

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2, A6, A8,A11, A15, A17, A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 30.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில், மேலப்புலியூர் செக்கடி தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தென்காசி கூலக்கடை பஜாரில் கிழமேலாக உள்ள ரோட்டில் தென் பக்கம் வடக்கு பார்த்து பூக்கடை வைத்திருந்தேன். தற்போது கொத்தனாராக வேலை செய்கிறேன். நான் 12.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிக்கு மேல் கடையை அடைத்துவிடுவேன். கூலக்கடை பக்கம் உள்ள முத்தாரம்மன் கோவில் அருகில் நடந்த பிரச்சனை பற்றி தெரியாது. நான் பிரச்சனை ஏற்பட்டதால் 3 நாட்கள் கடைக்கு வரவில்லை. ஏன் கடைக்கு வரமுடியாத சூழ்நிலை என்று நான் யாரையில் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் 14.08.2007 ம் தேதி செவ்வாய்கிழமை காலை கடையை திறந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தபோது காலை 10 மணிக்கு பல்க் பக்கம் போய் டிபன் சாப்பிட்டு திரும்ப 20 நிமிடத்தில் பிள்ளையார் கோவில் பக்கம் வரும்போது கிழக்கே கலவரம் நடந்தது என்றும் ஆளாளுக்கு தலைதெறிக்க ஓடினார்கள் என்றும் அதில் வலிந்த வாட்டசாட்டமான ஒரு பையன் கையில் அரிவாளுடன் மேற்கே பார்த்து ஓடிவரும்போது கால் தடுமாறி என் கடைப்பக்கம் கால்வாய் சிமிண்ட் சிலாப்பில் விழுந்தான் என்றும் அவன் விழுந்ததும் நவாஸ் நவாஸ் என்று ஒருத்தன் வந்து கீழே விழுத்தவன் பேரை சொல்லி கூப்பிட்டு தூக்கினான் என்றும் அப்போது நவாஸ் என்பவன் நெற்றியிலிருந்து ரத்தம் வந்தது என்றும் தூக்கிவிட்டவனுக்கும் காயமா, ரத்தமா இருந்தது என்றும் ஆனால் அவன் பெயர் என்னவென்று தெரியவில்லை என்றும் அவர் கூப்பிட்டதும் தான் கீழேவிழுந்தவன் பெயர் தெரியும் என்றும் இதை மட்டும் தான் பார்த்தேன் என்றும் கொலை நடந்ததை பார்க்கவில்லை என்றும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**